SECONDARY SCHOOL

END - OF - YEAR EXAMINATION - 2017

TAMIL LANGUAGE PAPER

SECONDARY 3 EXPRESS / 3NA

# TAMIL LANGUAGE

PAPER 2

FRIDAY

2 HOURS
(1100-1300)

## INSTRUCTIONS TO CANDIDATES

1. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்து கொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2. தேர்வு எழுதுவதற்கு முன்னர் விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையில் உமது பெயரையும், வகுப்பையும், வரிசை எண்ணையும் தெளிவாக எழுதவும்.

3. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுத வேண்டும்.

This question paper consists of 8 printed pages including the Cover Sheet

SECONDARY
3 EXPRESS

SECONDARY 3
SET 8 /15

More papers at www.testpapersfree.com

A1. மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (10 மதிப்பெண்கள் )

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q1. வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புபவர்கள் _____ _______ உழைக்க வேண்டும்..

Q2. தான் தொடங்கிய வியாபாரம் நொடித்துப் போவதற்குக் காரணமாக இருந்தவர்களை _______. _____ எழிலன் முடிவெடுத்தான்.

Q3. பெரியவர்களின் அறிவுரைகளுக்கு _______________ எவரும் வாழ்க்கையில் வெற்றி பெற இயலாது.

Q4. _______________ ஏமாற்றுபவர்களை நம்பி சிலர் தங்கள் பணம் பொருளை இழந்து விடுகின்றனர்.

Q5 எவ்வளவு அறிவுரைகளைக் கூறினாலும் ஒரு சிலரின் __________ ________ அறவே மாறுவதில்லை.

உதவிச்சொற்கள்

| | |
|---|---|
| 1 கழித்துக் கட்ட | 6 இனிக்க பேசி |
| 2 இளைத்து களைத்து | 7 ஓய்வு ஒழிச்சலின்றி |
| 3. கதை கட்டி | 8 ஈடுகட்ட |
| 4 உருட்டும் புரட்டும் | 9 உள்ளும் புறமும் |
| 5 செவி சாய்க்காத | 10 ஒத்துபாடாத |



More papers at www.testpapersfree.com

A2. வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள் )

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்தைய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும்; விடையை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q6. முதல் இளையர் ஒலிம்பிக் போட்டிகளை சீரும் சிறப்புமாக நடத்த சிங்கப்பூர் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சிங்கப்பூர் தீவிர நடவடிக்கைகளை எடுக்காவிட்டால் ______________________

Q7. இன்றைய தமிழ் தொலைக்காட்சி நாடகங்கள் சமூக பிரச்சினைகளை எடுத்துக் காட்டுகின்றன.

சமூக பிரச்சினைகள் ______________________

Q8. பிறரின் மதிப்பையும் மரியாதையையும் பெற நேர்மை தவறாமல் நடக்க வேண்டும்.

நேர்மை தவறாமல் நடந்தாலன்றி ______________________

Q9. சான்றோர்கள் பட்டறிந்து கூறும் அறிவுரைகளால் நாம் வாழ்க்கையில் உயரமுடியும்.

சான்றோர் பட்டறிந்து கூறும் அறிவுரைகள் ______________________

Q10. திருக்குறளில் நம் வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து அறநெறி கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன என்பது அறிஞர்களின் கருத்தாகும் .

திருக்குறளில் நம் வாழ்கைக்குத் தேவையான அனைத்து அறநெறி கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன என்று ______________________





More papers at www.testpapersfree.com

A3. <u>அமைப்புச் சொற்கள்</u> (10 மதிப்பெண்கள்)

கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள, பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, <u>அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக</u>.

பொதுவாக ஒரு சமுதாயத்தின் வாழ்வையும் வளத்தையும் பாதிக்கும் கூறுபாடுகள் நான்கு; அவை மக்கள் தொகை, இயற்கைவளம், அரசியல் பொருளாதார அமைப்பு, புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவை ஆகும். கடந்த நூற்றாண்டுகளில் மக்கள் தொகை, இயற்கை வளம் ஆகியவை 11__________ பெற்றிருந்தன.

காட்டுமிராண்டியாகத் திரிந்த மனிதன் பயிர்த்தொழில் செய்ய 12____ பொழுதுதான் நாகரிக வாழ்வின் முதல் அத்தியாயம் தொடங்கியது. கால போக்கில் நாகரிகங்கள் வலிமை குறைந்து, மெல்ல மறைந்ததற்கு 13__________ அயலார் படையெடுப்புகளும் மக்கள் தொகை பெருக்கமே ஆகும். அதற்கேற்ப நீர்வளத்தையும் நிலத்தின் விளைச்சலையும் பெருக்க அன்றைய மக்கள் தவறிவிட்டனர். இதனை கருத்தில் கொண்டு உருவானதுதான் தொழில் நாகரிகம். இதனை 14__________. அடிப்படையாய் அமைந்தவை அறிவியலும், விஞ்ஞான வளர்ச்சிகளுமே ஆகும்.

அறிவியல் உணர்வும், பொறியியல் திறனும் வளர வளர, கண்டுபிடிப்பகள் அதிகரித்தன. இந்த கண்டுபிடிப்புகளைக் கொண்டே நாடுகளின் 15__________ எடை போடப்படுகின்றன. இவையே நாட்டில் வன்முறைகள் பெருகக் காரணமாக உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | காரணம் | 6 | அவசியம் |
| 2 | உருவாக்கிய | 7 | தொடங்கிய |
| 3 | வலிமை | 8 | தோற்றம் |
| 4 | தோற்றுவிக்க | 9 | காப்பாற்ற |
| 5 | முக்கியத்துவம் | 10 | மற்ற |



More papers at www.testpapersfree.com

``இ`` ðம¤ó¤¾

C4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி 1

இன்றைய வாழ்க்கைச் சூழல் மிகவும் பரபரப்பு வாய்ந்ததாகிவிட்டது. ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் பெற்றோர் இருவரும் வேலை செய்ய வேண்டியுள்ளது. காலையில் எழுந்து பெற்றோர்களின் முகத்தைத் தேடும் பிள்ளைகளின் கண்களில் தென்படுவது தங்கள் பணிப்பெண்களின் முகங்களே. இந்நிலையில் அன்புடைய பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளோடு நெருங்கிப் பழக முடிவதில்லை. பெற்றோர்களின் கடமைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. காலத்தைச் சமாளிக்கத் தவிக்கும் பெற்றோர்களைப் போலவே ஆசிரியர்களும் பள்ளிகளில் தங்கள் நேரத்தைச் சமாளிக்கச் சிரமப்படுகிறார்கள். பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துவிட்டது. பாடங்கள் அதிகமாகிவிட்டன. குறித்த நேரத்திற்குள் பாடங்களை இயந்திரங்கள் போல் நடத்தி முடிக்க வேண்டியுள்ளது. ஆகவே மாணவர்களின் மனங்களை நெறிப்படுத்தும் ஆற்றல் ஆசிரியர்களுக்கும் முன்புபோல் இல்லை.

உள்ளத்தைப் பண்படுத்தும் ஆற்றல் சில புத்தகங்களுக்கு உண்டு. இளமையிலேயே நல்ல புத்தகங்களைப் படித்தால் உள்ளம் பண்படும். ஆனால் இன்று நூல்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துவிட்டது. அதனால் புத்தகங்களை மேலோட்டமாகப் படிக்கும் நிலை உருவாகிவிட்டது. பலரும் அவற்றை ஆழ்ந்து படிப்பதில்லை. வார, மாத இதழ்களைப் படித்து மகிழ்கிறார்கள். படித்து மறப்பதற்கென்றே படைக்கப்பட்டவை இவை. அந்தந்த வாரத்தோடு அவற்றின் பயன் முடிந்து விடுகின்றது. இதனால் புத்தகங்கள் மக்கள் மனத்தில் நீண்ட நாட்கள் நிலைத்திருப்பதில்லை. இந்நிலை மாறும்போது, புத்தகங்களின் பயனும் மாறும்.

More papers at www.testpapersfree.com

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q16. இக்காலப் பெற்றோர்களின் நிலை என்ன?

(1) பிள்ளைகளை வளர்க்கச் சிரமப்படுகிறார்கள்

(2) நேரத்தை வகுத்துக் கொள்ளச் சிரமப்படுகிறார்கள்

(3) தங்களுடைய கடமைகளைச் சமாளிக்கச் சிரமப்படுகிறார்கள்

(4) பிள்ளைகளோடு நெருங்கிப் பழகச் சிரமப்படுகிறார்கள்

Q17. மாணவர்களைப் பண்படுத்தும் ஆற்றல் ஆசிரியர்களிடையே ஏன் குறைந்துள்ளது?

(1) பரபரப்பான வாழ்க்கைச் சூழலால்

(2) மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டதால்

(3) பாடங்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டதால்

(4) குறித்த நேரத்திற்குள் பாடத்தை நடத்த வேண்டியிருப்பதால்

Q18. "இந்நிலை மாறும்போது, புத்தகங்களின் பயனும் மாறும்" என்ற தொடரில் இந்நிலை என்ற சொல் எதைக் குறிக்கிறது?

(1) வார, மாத இதழ்களின் பயனை

(2) மக்கள் மேலோட்டமாகப் படிப்பதை

(3) உள்ளத்தைப் பண்படுத்தும் நிலையை

(4) புத்தகங்களிலுள்ள கருத்துகளின் தரத்தை

More papers at www.testpapersfree.com

பகுதி 2

உலக நாடுகளில் சிங்கப்பூருக்குத் தனியிடம் உண்டு. 1819ஆம் ஆண்டு, ராபிள்ஸ் இங்கு வருவதற்கு முன், இந்திய நாட்டோடு, குறிப்பாகத் தமிழகத்தோடு இதற்குத் தொடர்பு இருந்திருக்கிறது. 1029 ஆம் ஆண்டு சோழப் பேரரசின் ஒரு பகுதியாகச் சிங்கப்பூர் இருந்தது என்று வரலாற்றாசிரியர் ஜே கென்னடி கூறுகிறார். சிங்கப்பூரின் தலைமை அஞ்சல் நிலையம், நாடாளுமன்றம், உச்சநீதி மன்றம், செயிண்ட் எணட்ருஸ் தேவாலயம் முதலிய பல கட்டடங்கள், நம் இந்திய தொழிலாளிகளின் அரிய உழைப்பால் உருவானவை என்பதை நம் இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ள வேண்டும் நமது தீவை ஜோகூர் பாருவுடன் இணைக்கும் பாலத்தைக் கட்டத் தமிழ்த் தொழிலாளிகளே பயன்படுத்தப்பட்டனர். முக்கால் மைல் நீளமுள்ள அது கட்டி முடிக்கப்படுமுன், படகேறித்தான் மக்கள் அக்கரைக்கும் இக்கரைக்கும் சென்று வந்தார்கள் என்று வரலாற்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன.

தேக்காவில் எல்லா மதத்தினருடைய வழிபாட்டு இடங்களையும் காணலாம். குறிப்பாகத் தமிழர்கள் கட்டிய வழிபாட்டிடங்கள் அவையென்பதையும் நாம் அறியலாம். தே என்பதைத் தனியாகவும் கா என்பதைத் தனியாகவும் எடுத்தால், தேவே காப்பாற்று என்று பொருள்படும். அந்தக் காலத்தில் தமிழர்களும், பீஹாரி மக்களுமே இங்குப் பால வியாபாரம் செய்திருக்கின்றனர். சுங்கை சிலேத்தார், யூச் சூக் காங், பழைய் அங் மோ கியோ, செம்பவாங் முதலிய இடங்களில் பால் பண்ணைகள் பெரிய அளவில் நடத்தப்பட்டன.



Q19. சிங்கப்பூர் தமிழகத்தோடு எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தது?

1. தமிழகத்தோடு வணிக தொடர்பு கொண்டிருந்தது.
2. தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்து.
3. சோழப் பேரரசோடு தொடர்பு கொண்டிருந்தது
4. சோழப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது

Q20. தேக்காவின் சிறப்பு என்ன?

1. நிறைய பால் பண்ணைகள் இருந்தன.
2. எல்லா வழிப்பாட்டுத் தளங்களும் அங்கு உள்ளன
3. எல்லா வழிபாட்டினரும் அங்கு உள்ளனர்,
4. நிறைய தமிழர்களும், பீஹாரி மக்களும் இருநதனர்

More papers at www.testpapersfree.com

'இ'- பிரிவு

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.

நமது வாழ்க்கையில் நாம் தவறாமல் சந்திக்கும் விருந்தாளிகள் இன்பமும், துன்பமும் ஆகும். நாம் இன்பத்தை வலிந்து வரவேற்கிறோம். ஆனால் துன்பத்தைக் கண்டாலோ கலங்கிவிடுகிறோம். இன்பமோ துன்பமோ இரண்டுமே நமது மனதை பொறுத்தே அமைகின்றன என்பதை அறியாமல் இருப்பதே இதற்கு காரணமாகும்.

நமக்கு ஏற்படும் பிரச்சினைகளை நாம் எப்படிச் சந்திக்க வேண்டுமோ அப்படிச் சந்திப்பதில்லை. மாறாக, பயத்தினாலும், கோபத்தினாலும் இயல்பான மனநிலையை இழக்கிறோம். அதனால் இதயம் வேகமாய் இயங்குகிறது; இரத்த அழுத்தம் அதிகமாகிறது. அதன் விளைவாக நம் சிந்தனை, செயல் ஆகிய இரண்டுமே தடுமாறுகின்றன. தவறான முடிவுகளையும்கூட நாம் எடுத்து விடுகிறோம். சில நேரங்களில் கடவுளையே நொந்து கொள்கிறோம். நமது தவறான அணுகுமுறையினால் துன்பத்திலிருந்து மீள முடியாமல் தவிக்கிறோம். முயற்சியின்மையால் துவள்கிறோம்.

உண்மையில், பிரச்சினைகளால் நிறைய நன்மைகள் கிடைக்கின்றன என்பதை நாம் அறிவதில்லை. கடவுள் நமக்கு வெகுமதியோ, வெற்றியோ கொடுக்க நினைக்கும்போது, அதை பிறந்தநாள் அல்லது திருமண அன்பளிப்பு கொடுப்பது போல் அழகிய அட்டைப்பெட்டியில் வைத்து, வண்ணக்காகிதத்தால் சுற்றிக் கொடுப்பதில்லை. அதைக் கஷ்டத்துக்கும், பிரச்சினைகளுக்கும் நடுவில்தான் வைத்திருக்கிறார். எனவே எவரிடம் பிரச்சினையை எதிர்த்து நிற்கும் தைரியமும், விடாமுயற்சியும், கடின உழைப்பும் இருக்கின்றனவோ அவருக்கே அதற்கான வெகுமதியும் வெற்றியும் கிடைக்கின்றன.

பிரச்சினைகளால் நமக்குக் கிடைக்கும் அனுபவங்கள் விலைமதிக்க முடியாதவை. அந்த அனுபவங்களால் அறிவு வளர்கிறது. "துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால், அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே" என்று அறிஞர் அல்போனியா அறிவுறுத்துகிறார். ஏனெனில் எதிர்காலத்தில் சில பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கும், பல பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும் இந்த அனுபவங்கள் பாடங்களாக அமைந்து உதவுகின்றன.

ஒரு வெறி நாய் துரத்தும்போது, நாம் மிக வேகமாய் ஓட்டப்பந்தயக்காரன் ஓடுவதைக் காட்டிலும் வேகமாய் ஓடுகிறோம். அதுபோல பிரச்சினைகள் நம் மூளையைக் கட்டாயப்படுத்திக் கூர்மையாகச் செயல்படச் செய்து, புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழி செய்கின்றன. நியாயமான குறுக்குவழிகளையும் புலப்படும்படிச் செய்கின்றன. பிரச்சினைகள் இல்லையெனில் வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லை வெற்றியும் இல்லை. மேலும், நமது முக்கியத்துவத்தை மற்றவர்களுக்கு உணர்த்தவும், உயர்வு பெறவும் இப்பிரச்சினைகளே நமக்குப் பயன்படுகின்றன. அதனால்தான் திருவள்ளுவர் " இடுக்கண் வருங்கால் நகுக " என்று கூறுகிறார்



More papers at www.testpapersfree.com

C5. <u>வினாக்கள</u> (25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை <u>விடைத்தாளில் எழுதுக</u>

Q21. வாழ்க்கையில் பிரச்சினைகளுக்கு காரணமாக அமைவது எது? (4 ம.பெ)

Q22. நாம் துன்பத்திலிருந்து மீள முடியாமல் தவிப்பது ஏன்? (6 ம. பெ)

Q23. பிரச்சினைகளினால் ஏற்படும் அனுபவங்களினால் நாம் பெறும் பயன்கள் யாவை? (6 ம. பெ)

Q24. பிரச்சினைகள் நம்மை எவ்வாறு இயக்குகின்றன? (4 ம. பெ)

Q25. வள்ளுவர் " இடுக்கண் வருங்கால் நகுக " என்று கூறுவது ஏன்? (5 ம. பெ)

D6. சொற்பொருள் ( 5 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை <u>விடைத்தாளில் எழுதுக.</u>

Q 26. வலிந்து
Q 27. மீள
Q 28. வெகுமதியும்
Q 29. தவிர்ப்பதற்கும்
Q 30. முக்கியத்துவத்தை

முற்றும்



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# TESTPAPER 8

Set 9- விடைகள்

வாழ்க்கையில் வெற்றி பெற ..........

Q1. 7 Q2. 1 Q3. 5 Q4. 6 Q5. 4

Q6. . . . முதல் இளையர் ஒலிம்பிக் போட்டிகளைச் சீரும் சிறப்புமாக நடத்த முடியாது.

Q7. . . . இன்றைய தமிழ் தொலைக்காட்சி நாடகங்களால் எடுத்துக் காட்டப்படுகின்றன.

Q8. . . . பிறரின் மதிப்பையும் மரியாதையையும் பெற முடியாது.

Q9. . . . நாம் வாழ்க்கையில் உயர உதவுகின்றன.

Q10. . . . அறிஞர்கள் கருதுகிறார்கள்.

Q11. 5 Q12. 7 Q13. 1 Q14. 4 Q15. 3

Q16. 1 Q17. 1 Q18. 2 Q19. 4 Q20. 2

Q21. வாழ்க்கையில் பிரச்சினைகளுக்குக் காரணமாக அமைவது இன்பமோ துன்பமோ இரண்டுமே நம் மனதைப் பொறுத்தே அமைகின்றன என்பதை அறியாமல் இருப்பதனாலேயே ஆகும்.

Q22. நமக்கு ஏற்படும் பிரச்சினைகளை நாம் எப்படிச் சந்திக்க வேண்டுமோ அப்படிச் சந்திக்காமல் பயத்தினாலும் கோபத்தினாலும் இயல்பான மனநிலையை இழக்கிறோம். அதனால் இதயம் வேகமாய் இயங்குவதோடு இரத்த அழுத்தம் இரத்த அழுத்தமும் அதிகமாகிறது. அதன் விளைவாக நம் சிந்தனை, செயல் ஆகிய இரண்டுமே தடுமாறி தவறான முடிவுகளையும்கூட நாம் எடுத்து விடுவதோடு சில நேரங்களில் கடவுளையே நொந்து கொள்கிறோம். இவற்றின் காரணமாகவும் நமது தவறான அணுகுமுறையினாலும் முயற்சியின்மையாலும் துன்பத்திலிருந்து நாம் மீள முடியாமல் தவிக்கிறோம்.

Q23. பிரச்சினைகளினால் ஏற்படும் அனுபவங்களினால் நாம் பெறும் நன்மைகள், அப்பிரச்சினைகளை எதிர்த்து நிற்கும் தைரியத்தையும் விடாமுயற்சியையும் கடின உழைப்பையும் நமக்கு ஏற்படுகிறது என்பதும் அவற்றினால் அதற்கான வெகுமதியும் வெற்றியும் கிடைக்கின்றன என்பதும் ஆகும். மேலும் அந்த அனுபவங்கள் அறிவை வளர்ப்பதோடு பல பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும் பாடங்களாக அமைந்து உதவுகின்றன என்பவையும் நன்மைகள் ஆகும்.

Q24. நம் மூளையைக் கட்டாயப்படுத்திக் கூர்மையாகச் செயல்படச் செய்து புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழி செய்வதன் மூலமாகவும் நியாயமான குறுக்குவழிகளையும் புலப்படும்படிச் செய்வதன் மூலமாகவும் பிரச்சினைகள் நம்மை இயக்குகின்றன.

Q25. பிரச்சினைகள் இல்லையெனில் வாழ்க்கையில் முன்னேற்றமோ வெற்றியோ இல்லை என்பதையும் நமது முக்கியத்துவத்தை மற்றவர்களுக்கு உணர்த்தவும் உயர்வு பெறவும் பிரச்சினைகளே நமக்குப் பயன்படுகின்றன என்பதையும் திருவள்ளுவர் கருத்தில் கொண்டே "இடுக்கண் வருங்கால் நகுக" என்று அவர் கூறக் காரணம் ஆகும்.

Q26. வலுக்கட்டாயமாக

Q27. தப்பித்துப் பழைய நிலையை அடைதல்

Q28. அன்பளிப்பும்

Q29. நிகழாமல் தடுப்பதற்கும்

Q30. இன்றியமையாத தன்மையை

More papers at www.testpapersfree.com